

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலை மற்றும் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் சிலைக்கு முன்னாள் அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் கே ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர் கதிர் வேல், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், பொதுக் குழு உறுப்பினர் அம்பலமுத்து மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமையில் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக கள ஆய்வுக் குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், என்.தில்லைசெல்வம், என்.சுரேஷ்ராஜன், வி.ஜோசப் ராஜ், எப்.எம்.இராஜரெத்தினம், ஐ.கேட்சன், ஏ.ஆர்.பூதலிங்கம், வழக்கறிஞர் ப.ஆனந்த், இ.ஜவகர் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எண்ணாத நாளில்லை!



- கலைஞர் திருமகனே!
அஞ்சுகத்தாயின்
ஒரேமகன்ஆகையால்
நீஒன்றானவன்

- கருப்பென்றும்
சிவப்பென்றும்
இரண்டானவன்

- பிறந்தநாளால்
மூன்றானவன்

- தியாகராயர்பெரியார்
அண்ணாகலைஞர்என்ற
வரலாற்றுவரிசையால்
நான்கானவன்

- தமிழ்நாட்டுமுதலமைச்சராய்
ஐம்முறைஆண்டதால்
ஐந்தானவன்

- தமிழுக்குஇனிப்பு
இந்திக்குக்கசப்பு
ஏழைக்குஉப்பு
வயிற்றில்கரைத்ததால்
எதிரிக்குப்புளிப்பு
வாதத்தில்உறைப்பு
பித்தம்நீக்கும்துவர்ப்பு
அறுவகைச்சுவைகளால்
ஆறானவன்

- வாரமெல்லாம்செய்தியானதால்
ஏழானவன்

- திசையெல்லாம்
இசைபடவாழ்ந்ததால்
எட்டானவன்

- கிரகங்களெல்லாம்சுற்றிவந்த
சூரியன்என்பதால்
நீநவமானவன்

- உன்னை
எண்ணங்களாலும்
சிந்திக்கலாம்;
எண்களாலும்சிந்திக்கலாம்

- இன்று மட்டுமா
உன் பிறந்தநாள்?
உதய சூரியன் உதிக்கும்
ஒவ்வொரு நாளும்
உன் பிறந்தநாள்தான்

- கேள்விகளுக்கு
விடையும்நீதான்
தோல்விகளுக்கு
மருந்தும்நீதான்

கவிப்பேரரசு
**வைரமுத்து**


